செய்தி வெளியீடு எண்: 100 நாள்: 09.02.2018

## செய்தி வெளியீடு

சென்னை கிண்டியில் அமைந்துள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலக தரை தளத்தில் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை திரு. கே.சி. கருப்பணன் அவர்களால் குறை தீர்ப்பு மையம் 08.02.2018 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இவ்விழாவில் முதன்மை செயலர் (சுற்றுச்சூழல் மற்றும் வனம்) தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் மற்றும் வாரிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தொழில் முனைவோர்கள் மற்றும் தொழில் அதிபர்கள் தொழில் துவங்க தேவையான தொழிற்நுட்ப ஆலோசனைகள், இசைவாணை பெற குறித்த சந்தேகங்கள் மற்றும் புகார்கள் ஆகியவற்றை தெளிவு செய்யவும் சுற்றுச்சூழல் குறித்த பொதுமக்கள் வினாக்களுக்கு பதில் அளிக்கவும் இம்மையம் செயல்படும்.

திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் காலை 10 மணிமுதல் மதியம் 1 மணி வரை இணை தலைமை சுற்றுச்சூழல் நல பொறியாளரும் செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் 10 மணிமுதல் மதியம் 1 மணி வரை சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களும் குறைகளை கேட்டறிந்து உரிய பதில் அளிப்பார்கள்.

இந்த குறை தீர்க்கும் மையத்தினை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திறந்து வைக்கும் சமயம் பொதுமக்கள் மற்றும் தொழில் துறை பிரதிநிதிகளின் வினாக்களை அதிக கவனத்தோடு கேட்டறிந்து பொறுமையாக பதிலளிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**